சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் துறை – நில மேம்பாடு மற்றும் சிறு பாசன திட்ட இயந்திரங்களை இயக்குவதற்காக 120 பணியாளர் (100 இளநிலை உழுவை ஓட்டுநருடன் கூடிய துடைப்பாளர்கள் மற்றும் 20 உதவி துளைஞர்கள்) வெளிமுகமை மூலம் ஒப்பந்தம் அடிப்படையில் நியமனம் செய்ய – அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.பொ.1) துறை

அரசு ஆணை(நிலை) எண்.261

நாள்: 23.10.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
விளம்பி, ஐப்பசி 6ம் நாள்

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண். 356, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 30.08.2007.
2. அரசு ஆணை (நிலை) எண். 220, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 25.11.2011.
3. அரசு ஆணை (நிலை) எண்.119, வேளாண்மை (நீ.மே.1) துறை, நாள் 02.05.2017.
4. அரசு ஆணை (நிலை) எண்.277, வேளாண்மை (வே.பொ1) துறை, நாள் 07.11.2017.
5 அரசு கடித எண்.169, வேளாண்மை (வே.பொ1)/2016–15, நாள் 14.11.2017.
6 தலைமைப் பொறியாளர் (வே.பொ) கடித எண். எண்.ட்டி1/44451/2017, நாள் 01.03.2018

-------

ஆணை

மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாடு மற்றும் சிறுபாசனத் திட்டங்களின் உட்கட்டமைப்பு அமைப்புகளை வலுப்படுத்தவதற்காக, ரூ.2067.00 இலட்சங்கள் செலவில், நபார்டு வங்கி உதவியுடன், 60 முதல் 70 குதிரை சக்தி வரையுள்ள அதிக திறன் கொண்ட ஐம்பது உழுவை இயந்திரங்கள் மற்றும் வேளாண்கருவிகள், பத்து சுழல் விசைத் துளைக் கருவிகள் மற்றும் அதற்கான உபகரணங்கள் ஆகியவற்றை, வேளாண்மைப் பொறியியல் துறையில் இயந்திரங்களை வாடகைக்கு விடும் திட்டத்தின் பயன்பாட்டிற்காக, பெறும் பொருட்டு ரூ.20.67 கோடிக்கு நிர்வாக ஒப்புதலும், ரூ.3.9273 கோடியை முன்பணமாகவும் ஒப்பளித்து அரசாணை வழங்கப்பட்டது.

2) மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் மீதமுள்ள ரூ.1674.27 இலட்சங்களுக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் ரூ.20.67 கோடி செலவில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் அவற்றுக்கான உபகரணங்கள் வாங்கிடுவதற்காக அரசால் நிதி ஒப்புதல்

(த.பி.ப)

ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, அதிக திறன் கொண்ட ஐம்பது உழுவைகளை வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வாங்கிடுவதற்காக கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உழுவைகள் வேளாண்மைப் பொறியியல் துறையின் உப கோட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சுழல் விசைத் துளை கருவிகளுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு கொள்முதல் ஆணைகள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனத்திடமிருந்து, சுழல் விசைத் துளைக் கருவிகள், வேளாண்மைப் பொறியியல் துறையின் உபகோட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற தருவாயில் உள்ளது என மேலே 6ல் படிக்கப்பட்ட கடிதத்தில் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

3) மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் உழுவை இயந்திரங்களை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் 25 இயக்கிகளை (Operators) நியமித்துக் கொள்ள தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது. மேலும், மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கதிர் அறுவடை இயந்திரங்களை இயக்குவதற்காக 24 முதுநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Senior Tractor Driver cum cleaner) பணியிடங்களும் கனரக உழுவைகளை இயக்குவதற்காக, இளநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் துடைப்பாளர் (Junior Tractor Driver cum cleaner) 25 பணியிடங்களும், விசைத் துளை கருவிகளை இயக்குவதற்காக 10 துளைஞர்கள் மற்றும் 10 உதவி துளைஞர்கள் பணியிடங்களும் ஒப்பந்த அடிப்படையில் (Contract pay) நியமித்து கொள்ள அரசால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2017–2018ஆம் நிதியாண்டில் நில மேம்பாட்டுத் திட்டம், சிறு பாசனத் திட்டங்களில் பணியில் உள்ள களப் பணியாளர் (Staff In position) விபரங்களை தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார். நிலமேம்பாட்டுத்திட்டம் மற்றும் சிறுபாசனத் திட்டங்களில் பணிபுரிந்து வருகின்ற களப்பணியாளர்கள் (Staff In position) எண்ணிக்கையை, ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களுடன் (Sanctioned Strength) ஒப்பீடு செய்கையில், 40% மட்டுமே உள்ளனர். மேலும், ஒவ்வொரு இயந்திரத்திற்கும் தேவைப்படுகின்ற பணியாளர்களின் (as per norms) எண்ணிக்கையுடன் ஒப்பீடுகையில் 36% மட்டுமே (அதாவது, 918 பேர் தேவைக்கு 330 பேர் மட்டுமே) களப்பணியாளர்கள் தற்போது வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ளனர் என்றும், இந்நிலையில் புதியதாக வாங்கப்பட்டுள்ள அதிக குதிரைசக்தி கொண்ட 50 உழுவைகளுக்கு, 1 உழுவைக்கு 1 JTD, TC என்கிற norms அடிப்படையில் மொத்தம் 50 இளநிலை உழுவை ஓட்டுநர் மற்றும் 50 துடைப்பாளர் ஆகியோர் அவசியம் தேவைப்படுகின்றனர் என்றும், அதே போல புதியதாக பெறப்படவுள்ள சுழல் விசைத்துளை கருவிகளுக்கு 10 துளைஞர்கள் (Drillers) மற்றும் 10 உதவி துளைஞர்கள் ( Assistant Drillers) தேவைப் படுகின்றனர் என்றும், ஆக மொத்தம் புதியதாக வாங்கி இயக்கப்படுகின்ற இயந்திரங்களுக்காக மொத்தம் 120 களப்பணியாளர்கள் இன்னும் தேவைப்படுகின்றனர் என்றும், இதன்படி, புதியதாக வாங்கப்பட்டுள்ள 50 உழுவை மற்றும் 10 சுழல் விசைத்துளைக் கருவிகள் போன்ற இயந்திரங்களை தொய்வின்றியும், உரிய இலக்கினை, சாதனை குறைவின்றி, அடைகின்ற வகையில், இயக்கிட 50 டிராக்டர்களுக்கு 100 இளநிலை உழுவை ஓட்டுநருடன் கலந்த துடைப்பாளர்கள் (JTD Cum Cleaner) மற்றும் 20 உதவி துளைஞர்கள் (Assistant Driller) ஆக மொத்தம் 120 களப்பணியாளர்கள் தேவைப்படுகின்றனர் என தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தெரிவித்துள்ளார்.

4) மேலும், மேலே ஐந்தில் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையில் நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறு பாசனத் திட்டங்களில் வாடகைக்கு விடப்படுகின்ற இயந்திரங்களை இயக்கிடுவதற்கு தேவைப்படுகின்ற களப் பணியாளர்களை, வெளிமுகமை ஒப்பந்தம் வாயிலாக, எடுத்துக்கொள்ளலாம் எனவும், எனவே, வேளாண்மைப் பொறியியல்

(த.பி.ப)

துறையின் நிலமேம்பாடு மற்றும் சிறுபாசனத்திட்ட இயந்திரங்களை இயக்குவதற்காக 100 இளநிலை உழுவை ஓட்டுநருடன் கூடிய துடைப்பாளர்கள் மற்றும் 20 உதவி துளைஞர்களை வெளிமுகமை ( Out Sourcing ) மூலம் ஒப்பந்த அடிப்படையில் உரிய கல்வி மற்றும் இதர தகுதிகளை கொண்ட நபர்களை ரூ.12,000/– மாத ஊதியத்தில், நியமனம் செய்துகொள்ள, அனுமதி வழங்குமாறும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கோரியுள்ளார்.

I. இளநிலை உழுவை ஓட்டுநருடன் கூடிய துடைப்பாளர் (JTD cum Cleaner) பணிநியமனத்திற்கான கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள் பின்வருமாறு:–

i) 8–ம் வகுப்பு தேர்ச்சி
ii) நடைமுறையிலுள்ள கனரக வாகன ஓட்டுநர் உரிமம்
iii) உழுவை இயந்திரங்களை ஓராண்டுகாலம் இயக்குவதற்கும் மற்றும் இயந்திரம் பராமரிப்பது குறித்தும் அனுபவம்.
iv) நல்ல உடல்தகுதி சான்று

II. உதவித்துளைஞர் (Assistant Driller) பணிநியமனத்திற்கான கல்வித்தகுதி மற்றும் இதர தகுதிகள்:

i) Possession of Certificate issued by the Industrial Training Institute for having completed training in Mechanics (Diesel) preferably or Mechanics (Motor vehicles ) and Practical experience for 2 years in a reputed workshop in trade in which the candidate is trained.

(or)

Possession of diploma in Mechanical Engineering

மேலும் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) தனது கருத்துருவில் 120 களப்பணியாளர்களை வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் வாயிலாக (Outsourcing through Agency – tender) எடுத்துக் கொள்வதற்கு அரசின் அனுமதி பெற்ற பிறகே, இப்பணியாளர்களை வெளிமுகமை மூலம் நியமனம் செய்வதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படும் என்றும் அதன் பிறகே செலவின விபரங்கள் அரசுக்கு அனுப்ப இயலும், என்றும் தற்போது ஒப்பந்த ஊதியத்தில் பணிபுரிபவர்களுக்கு மாதம் ரூ.12000/– சம்பளம் வழங்கப்படுகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

5) தலைமைப் பொறியாளர் (வே.பொ.)வின் கருத்துருவினை, நன்கு பரிசீலனை செய்து, அதனை எற்று அரசு பின்வருமாறு ஆணையிடுகிறது.

i. வேளாண்மை பொறியியல் துறையின் நில மேம்பாடு மற்றும் சிறுபாசன திட்ட இயந்திரங்களை இயக்குவதற்காக மேலே பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள உரிய கல்வி தகுதி மற்றும் இதர தகுதிகளை கொண்ட நபர்களை கொண்டு ரூ.12,000/– மாத ஊதியத்தில், வெளிமுகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் 100 இளநிலை உழுவை ஓட்டுநருடன் கூடிய துடைப்பாளர்கள் (Junior Tractor Driver Cum Cleaner) மற்றும் 20 உதவி துளைஞர்களை (Assistant Drillers), ஆணை வெளியிடப்படும் நாள் முதல் ஓராண்டு காலம் அல்லது தேவை முடியும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தற்காலிகமாக நியமனம் செய்யவும் இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரவும் அனுமதி அளித்து ஆணையிடுகிறது.

ii. வெளிமுகமை மூலம் ஒப்பந்தம் வாயிலாக பணியாளர்கள் பணியமர்த்தம் செய்யப்படும் போது யாரேனும் பணியாளர்கள் பணிக்கு வராமலிருப்பின் அதனால் ஏற்படும் இழப்பீட்டை வெளிமுகமையே ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிபந்தனை விதிக்கப்படுகிறது.

iii. வெளிமுகமை வாயிலான இயந்திரம் இயக்கும் பணியில் பணியாளர்களை நியமனம் செய்யும் போது, அனைத்து இயந்திரங்களும் எப்பொழுதும் இயங்கும் என தெரிவித்து, வேலைக்கு வராதவர்களை அல்லது இயந்திரம் இயக்காத நேரத்தை கண்டறிந்து, குறைப்பதை காட்டிலும், இயந்திரம் இயக்கும் பணியை வெளிமுகமை மூலம் இவ்வளவு இயந்திரங்கள், இவ்வளவு நேரம், தரமாக இயக்க வேண்டும், அதற்கான இயக்குபவர்களை அளிப்பதற்கு வெளிமுகமைக்கு நிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அறிவுறுத்தப்படுகிறார்.

6) இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா..எண் 49108/Agri/2018, நாள் 17.10.2018–ன் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை–35
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை–18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&SSA), சென்னை–18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை –18 (பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.
ஆணையர், கருவூல கணக்கு அலுவலகம், சென்னை–15.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காயர் அலுவலகம்
(சமூகத் தணிக்கைப் பிரிவு) சென்னை–9.

நகல்

நிதி (வேளாண்மை/வரவு செலவு பொது.II) துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மை செயலாளரின் தனிச்செயலர்,
வேளாண்மைத் துறை, சென்னை–9.
உதவி நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு 3) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.